## வரைவு செய்திக்குறிப்பு

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மத்திய பண்ணையில் பால் உற்பத்தியினை பெருக்கிட, தொடக்க கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்கு மருத்துவ வசதியினை அளிப்பது அவசியமாகிறது. எனவே, இவ்வொன்றியத்தில் தற்காலிக பணியில் காலியாக உள்ள 7 கால்நடை மருத்துவ ஆலோசகர்களின் பணிநிலை ஒப்பந்த அடிப்படையில் நிரப்பபட உள்ளது.

எனவே, இவ்வொன்றியத்தில் காலியாக உள்ள 7 ஒப்பந்த கால்நடை மருத்துவ ஆலோசகர்கள் பணியில் பணிபுரிய விருப்பமுள்ள கால்நடை மருத்துவ பட்டதாரிகள் கீழ்கண்ட குறைந்தபட்ச தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.

1. இளநிலை கால்நடை மருத்துவ பட்டப்படிப்பு.
2. கால்நடை மருத்துவ கவுன்சில் பதிவு சான்றிதழ்.
3. சொந்த இருசக்கர வாகனம் அல்லது நான்கு சக்கர வாகனம் மற்றும் ஓட்டுநர் உரிமம்.
4. வயது வரம்பு – 50க்குள் இருக்க வேண்டும்.
5. கணிணி பயன்பாடு தெரிந்திருக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தகுதி பெற்றுள்ள கால்நடை மருத்துவர்கள் தங்களின் கல்வித்தகுதி, பட்டப்படிப்பு, கால்நடை மருத்துவ கவுன்சில் பதிவு சான்றிதழ் மற்றும் இருசக்கர வாகன அல்லது நான்கு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம், வாகனத்தின் பதிவு சான்றிதழ் மற்றும் இரண்டு பாஸ்போட் அளவு புகைப்படம் ஆகியவற்றின் அசல் மற்றும் நகலுடன் வரும் 13.02.2026 அன்று காலை 11:00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய வளாகத்தில் நடைபெற உள்ள நேரடி தேர்வில் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதற்கான போக்குவரத்து செலவுகள் அனைத்தையும் தங்களது சொந்த பொறுப்பில் மேற்கொள்ள வேண்டும்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு
பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்காக
(ஒம்) S.முத்துமாரி
மா.வ.அலுவலர் / பொது மேலாளர்

பொது மேலாளருக்காக

31/01/26